12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது

# அருளுலக முப்பெரு விழா





இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 ஐப்பசி மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. அருளுலக முப்பெரு விழா - 3.10.1983இல் குருதேவர் எழுதிய செயல் ஊக்கத் திருவோலை (குருநிலை விளக்கக் குறிப்பும்).

2. முப்பெரு விழாவில் நிகழ்ந்த சித்து விளையாடல் - 21/10/1983இல் குருதேவர் எழுதிய அருட்கணிப்பு மடலில் உள்ள குறிப்பு.

3. அருட்கணிப்பு மடல் - 23/10/1983இல் சிறுமுகை சித்தரடியானுக்கு குருதேவர் எழுதிய மடல்.

4. "இரண்டாம் முப்பெருவிழா செயல்விளக்க எச்சரிக்கை மடல்" - "மூன்றும் முப்பெருவிழா செயல்நிலை பாராட்டுத் திருவோலை" - 29/11/1983இல் குருதேவர் எழுதிய விளக்க மடல்.

5. நலம் நாடும் திருவோலை - 30/11/1983இல் குருதேவர் தமது பெங்களூரு சித்தரடியானுக்கு எழுதிய மடலிலிருந்து சிறுசிறு குறிப்புக்கள்.

6. "செயற்குழு மாநாடு அறிவிப்பு மடல்" - 16/12/1983இல் குருதேவர் எழுதிய 'நான்காம் முப்பெருவிழா செயற்குழு மாநாடு' பற்றிய மடல்.

7. வேம்பை அடியான்களுக்கு விளக்கம் தரும் மடல் - 22/4/1983இல் குருதேவர் எழுதிய நெடிய விளக்க மடல்.

# அருளுலக முப்பெரு விழா

## அருளாட்சி அறிவிப்பு விழா!

## அருளாட்சி அழைப்பு விழா!

## அருளாட்சி அமைப்பு விழா!

பொருளுலக இருள்களையும், இன்னல்களையும், இயலாமைகளையும் இல்லாமல் செய்திட அருளை அநுபவப் பொருளாகப் பெற்று அருளுலக மாவீரர்களாக வளர வாரீர்! வாரீர்! வாரீர்!

பதினெண் சித்தர்களின் இந்துமதம் செயலாகி உருவான பிற்காலச் சோழப் பேரரசினை உருவாக்கிய தத்துவங்களும், செயல்முறைகளும் தாய்நாட்டை நாற்றுப் பண்ணையாக்கித் தயாரிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன. அவரவர் விருப்பாற்றலுக்கேற்ப வாங்கிச் சென்று பயிராக்குங்கள். இவற்றின் அறுவடையில் பசிகளும், தாகங்களும், பற்றுக் குறைகளும், ஏக்கங்களும் பறந்தோடிடும்.

குருதேவர், ஞானகுரு, பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், அரசயோகி ஞாலகுரு சித்தர் கருவூரார் **'ஆவி, ஆன்மா, உயிர் மூன்றும் உணர்த்தப்படும் முப்பெருவிழா!'**, **'இறை, பதி, தலை மூன்றும் ஒன்றுக்கப்படும் முப்பெருவிழா!'**, **'முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு மூன்றும் புரியச் செய்யப்படும் முப்பெருவிழா!'**, **'இந்துமத உண்மை வரலாறும், வாழ்வியலும் விளக்கும் தத்துவத் திருவிளக்க நிறைவு விழா!'**, ........ நிகழ்த்துகிறார்.

இடம்: ................

நாள்: 14-10-83, 15-10-83, 16-10-83.

பங்கு பெறுக! பயன் பெறுக!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

# செயல் ஊக்கத் திருவோலை (குருநிலை விளக்கக் குறிப்பும்)

3-10-83இல் குருதேவர், ஞாலகுரு சித்தர் கருவூரார் அருள்மிகு சௌடாம்பிகை அம்மன் சன்னிதானத்துக்கு வரைவது.

1. அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! வாழ்க! வளர்க! விழிச்சியோடு செயல்படுக!

2. தாங்கள் பெருமுயற்சியுடனும், பெரும் பொருட்செலவுடனும் புதிய சன்னிதானங்களின் காதணி விழாவில் கலந்து கொண்டதற்கு மிக்க மகிழ்ச்சி! எம் வாழ்த்து. சென்ற மாதம் எமக்குத் தொகை அனுப்பாதது பற்றி வருந்த வேண்டாம். உங்களின் உள்ள ஆர்வமும், உடல் உழைப்பும் விலை மதிப்பிட முடியாதவை, பெரியவை, பயனுடையவை.

3. தங்களைப் போல் நமது குருவாணை ஓலைநாயகம், அங்காள பரமேசுவரி சன்னிதானம் அவர்கள் காதணி விழாவில் ஆயிரக்கணக்கில் செலவிட்டார். இ.ம.இ. வளர்ச்சிக்காக தமது செலவில் 14,15,16 திருச்சி, காரைக்குடி சுற்றுப்பயண ஏற்பாடுகளைச் செய்துள்ளார். 13/10/83 மலைக்கோட்டை வண்டியில் புறப்பட்டு 14/10/83 திருச்சி புகைவண்டிச் சந்திப்பிலும்; 15, 16 காரைக்குடியிலும் அருட்பணிகள், இ.ம.இ. அமைப்பு அலுவல்கள் நிகழ்த்தப்பட உள்ளன. தாங்களோ, தங்களைச் சார்ந்தவரோ இதில் பங்கு பெறுதல் வரவேற்கத் தக்கது. பயனுடையது.

4. நமது குருவாணை ஓலைநாயகம் மாதாமாதம் ஒரு சுற்றுப் பயணத்துக்குரிய செலவினை நன்கொடையாக வழங்கித் தாமும் எம்மோடு பயணப்பட ஒப்புதல் வழங்கியுள்ளார். இவர் போல், தங்களைப் போல்,...... சிலராவது நமது நண்பர்களில் பொதுநல நாட்டத்துடன் துணிந்து செயல்பட்டேயாக வேண்டும்.

தமிழகம் முழுதும் சுற்றுப்பயணம் செய்பவர்கள் நமக்குத் தேவை. <u>அருளுலக ஆற்றலின் ஊற்றுக்களாக மாறுபவர்கள்</u> நாடெங்கும் அருட்பணி விரிவாக்கத் திட்டப் பணிமனைகள் [***யாகசாலைகள், குருகுலங்கள், தெய்வீக மருத்துவ மையங்கள், அருட்கணிப்பு மன்றங்கள், அருள்வழங்கு சித்திச் சாலைகள், கருவறை உயிர்ப்புப் பணிச் சத்திச் சோலைகள், அருளூறு தாந்தரீக மாந்தரீக ஏந்தரீகச் சக்கரங்கள்..... வழங்கு முத்திக் கோட்டைகள், அனைத்துக் கோளாறுகளையும் அருள்மழையால் நலமாக்கும் அருட் கோட்டங்கள், அருளாளர்களை உருவாக்கும் வெட்டவெளிக் கருவறைகள்,.....***]; இ.ம.இ. கிளை அலுவலகங்கள், சமய சமுதாய கலை இலக்கிய தொழில்........ சான்றோர்களின் பெயரில் மன்றங்கள்......... முதலியவை உருவாக்கிடும் செயலில் ஈடுபடல் வேண்டும்.

ஏனெனில், <u>நமது நெறியும், செயலும், ஊக்கும், போக்கும்........... பற்றிய செய்திகள் காட்டுத் தீ போல் எங்கும் செய்தியாகப் பரவி விட்டன</u>. அதனால், விரைந்து அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்க வேண்டிய அவசரமும் அவசியமும் இப்போது நமக்கு வந்து விட்டன. நமக்கு நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களும், ஒழுங்குகளும், வெளிப்படையான செயல்பாடுகளும் உடனடியாக உருவாகிட வேண்டும். இல்லையேல், நாம் இதுகாறும் தோன்றிய தலைவர்களைப் போல் வாய்வேதாந்தம் [mere Theoreticians] பேசியவர்களாகிடுவோம்.

பதினெண்சித்தர்கள் கூறும் இந்துமதம் காட்டும் ‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ அமைத்தே தீர வேண்டும்.

இதற்காகத் தங்களால் இயன்ற அருளுதவி, பொருளுதவி, உடலுழைப்புதவி......... முதலியவைகளை வாரிவாரி வழங்குக! செயல்படுக!

5. நண்ப! இத்துடன் அனுப்புபவைகளுக்கு இயன்றவரை விரைந்து நகல்கள் அனுப்புங்கள். யாம், மைசூர் மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்ய உரிய வசதி, வாய்ப்புச் சூழல்களை உருவாக்குங்கள். இ.ம.இ.யின் அமைப்பும், வளர்ச்சியும் உலகியலாக இருக்கும்; அருட்பணி விரிவாக்கத் திட்டம் முழுக்க முழுக்க உலகியலுக்கு அப்பாற்பட்டே அருளியலாக இருக்கும். எனவே, இரண்டு அமைப்புக்களும் தனித்தனியாக; ஆனால் ஒன்றையொன்று புரிந்தும், விரும்பியும் செயல்படக் கூடியனவாக வளர்க்கப்பட்டேயாக வேண்டும். இவற்றைப் புரிந்து செயல்பட உங்களைப் போன்றோர் பலரையும் உருவாக்கிச் செயல்படலோடு; நேரடியாகவும் செயலில் இறங்க வேண்டும்.

6. 10-10-1983 எமது 48வது பிறந்த நாள்விழா ‘**அருளாட்சி அழைப்பு**’, ‘**அருளாட்சி அறிவிப்பு**’, ‘**அருளாட்சி அமைப்பு**’ ....... என்ற மூன்று நிலைகளும் நிறைவு பெற்றுவிட்ட ‘**முப்பெருவிழா**’வாகவே திருவுள ஒப்புதல்களோடும், தாத்தாக்கள் ஆத்தாக்கள் சம்மதங்களோடும், உலக அருளாளர்களின் விருப்பமிகு முழுமைத் துணையோடும் அறிவிக்கப்படுகின்றன. அன்பு கூர்ந்து இதனைத் தாங்களே, விரைந்து இதன் நகல்களை அனைவருக்கும் அனுப்பி அறிவிப்புச் செய்யுங்கள்.

7. நண்ப! யாம்தான் முதலாளிகளால் விலைக்கு வாங்கப் பட்டுவிடாத அருளாளராகத் தொடர்ந்து வாழுகிறோம். எம்மிடம்தான் சாதி, மத, இன, மொழி வேறுபாட்டு உணர்வே இல்லை. யாம்தான் ஏழைகளுக்கும், பாட்டாளிகளுக்கும், படிப்பில்லாப் பாமரர்களுக்கும் உரிய வழியாக, வழித்துணையாக, வழிப்பயனாக......... வாழுகிறோம். உலக மானுட நல மேம்பாட்டுப் பணிக்கே மாபெரும் இழப்பு ஏற்படும் வண்ணம் எம்மை எம் காலத்தவர் பயன்படுத்தாமல் போய்விடக் கூடாது! இது எச்சரிக்கை வேண்டுகோள்; அறிவின் புலம்பல்!

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: குருதேவர் அவர்களின் கையெழுத்திலேயே இருந்தது.//**

# முப்பெரு விழாவில் நிகழ்ந்த சித்து விளையாடல்

அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி (வேம்படிதாளம், சேலம் மாவட்டம்) 21/10/83இல் பரிந்துரைத்த அவசர அருட்கணிப்பு மடலில் உள்ள ஒரு குறிப்பு:-

செம்பியம், சென்னை, 23/10/83

வேம்படிதாள நண்பர்களில் கவிமேகம் கவிஞர் இல.க.கணேசனும், செயல்மறவன் சீ.மணியும் இருப்பதால் உடனடியாக **‘முப்பெருவிழா’** நிகழ்ச்சிகளையும், அநுபவங்களையும், எமது கருத்துரைகளையும், செயல்களையும் இனிய கட்டுரையாக்கி எமக்கும் பலருக்கும் அனுப்புங்கள்.

[முன்பு] வைகாசி மாத ஞானம் வழங்கு பால்குட விழாவில் வலைச்சேரிபட்டி மக்கள் கேட்டதற்கிணங்க நமது அடியான்களே அத்திறங்கள் ஓச்சி மழையை வரவழைத்தனர்.

இந்த முப்பெரு விழாவில் தருக்காகுடி மக்கள் “எங்கள் ஊர் மலையை உங்களுக்காகக் கொடுத்தோம். சித்தரய்யா எங்களுக்காக மழையை வரவழைத்துத் தாருங்கள்” என்று கேட்டபோது; யாம், “நம் மனம் குளிர்ந்தது போல தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நடக்கும்” என்று கூறி வானத்தைப் பார்த்தோம். நிலவொளியில் நீலவானம் மேகமே இல்லாமல் இருந்தது கண்டு யாமும் பிறரும் சில நாட்களுக்குள்

மழை கிடைக்கலாம் என எண்ணினோம். ஆனால், 15/10/83 சனி இரவு 7.15 மணிக்கு யாம், “மழையைத் தாத்தாக்கள் ஆத்தாக்கள் தருவார்கள்” என்று கூறியது 8.30 மணிக்கெல்லாம் மெய்யாகிக் கோடை மழை போல் மிக மிகப் பெரிய மழை பெய்தது.

இவை சித்தர் நெறி இயற்கை ஆளும் ஆற்றலுடையது என்பதையே விளக்குகின்றன. யாம், சித்துக்கள் அனைத்தும் தனித்தனியே கடந்து விட்டோமாதலால், இப்போது நிகழ்பவை எம்மையும் மீறித் தாமாக வெளிப்படும் சித்துக்களே! ... எமது சொல்மழை, செயல்மழை, அன்புமழை ..... அனைத்தும் வரலாறுக்கப் படட்டும்.

**அன்பு**

**ஞானத்தந்தை, குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூறார்.**

**//உண்மை நகல்//**

நகலெடுத்தவர்:

அருள்மிகு பச்சைமலை வீரப் படபத்திரகாளி சன்னிதானம், இரா.சீனிவாசன்.

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

பெறுநர்:- சித.இரவிக்குமார், சிறுமுகை, கோவை மாவட்டம்.

# அருட்கணிப்பு மடல்

23/10/83,
செம்பியம், சென்னை-11.

பேரார்வமிக்க அருட்குடும்பச் செல்வன் சித.இரவிக்குமார் அவர்களுக்கு ஞாலகுரு சித்தர் கருவூரூர் அவசர அவசியமாக விடுக்கும் அருட்கணிப்பு மடல்.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே என்று செயல்படத் தவறியதால், முழுமை நலம் பெறுமல் 21.10.83இல் சிறுமுகையூரிலிருந்து தாங்களும், தங்களது தாயாரும் எழுதிய மடல் கண்டோம். கவன்றேம், உடன் அருட்கணிப்பும் கணித்தோம்.....!?....

2) தாங்கள் மிகமிகப் பாதுகாப்பான நிலையிலேயே இருக்கிறீர்கள். போர்க்களத்தில் நிற்கும் வீரன் துணிந்து எதிரிகளைப் பார்த்துச் சுட்டுக் கொன்று குவித்து முன்னேறுவது போல் அத்திற ஓச்சுக்களைச் செய்து அமைதியும், நிறைவும், துணிவும், ஆர்வமும் பெற்றுக் கல்வி கற்க வேண்டியவனே நீ. உனக்காக ஆத்தாள் தேவி காடையூர்க் காளி அன்றுடம் ஒருமுறையாவது உன்னை வந்து கண்டு அருள்புரிவாள். இனியும் கோழையாக இருக்கக் கூடாது.

3) அன்றுடம் சூரிய உதயம் (காலை), சூரிய மறைவு (மாலை), இரவு படுக்கு முன் குறைந்தது ½ (அரை) மணி நேரம்

..... ..... ..... ..... ..... ..... ..... ..... .....

பூசை செய்திடுக! யாவும் சரியாகி நன்மையாகிடும்.

4) இனிய இளைஞ! **“கோழையின் கையில் எத்தகைய கூர்வாள் இருந்தாலும் பயன்படாது”** - என்ற குருபாரம்பரிய வாசகத்தையே இங்கு குறிக்க விரும்புகிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிறரின் சூழ்ச்சிகளால் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுற்று ஆழ்ச்சி மாறாமல் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தை விடுதலை பெற்று வீறு கொண்டு எழச் செய்தால்தான் ‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை’ அருட்புரட்சியால் அமைக்க முடியும். அதற்காக உருவாக்கப் படுபவர்களில் உனது குடும்பமும் இருப்பதாலேயே இரண்டாவது முறையாகப் பூசைமுறை வழங்கப் படுகிறது. இதை நழுவ விட்டுவிடாதே.

5) சித்தர்களின் பூசைகளில் கட்டாயமில்லை! அவரவர் அறிவு, உணர்வு, நம்பிக்கை, ஆர்வம், பயிற்சி, முயற்சி, ... முதலியவைகளை ஆராய்ந்தே குருதேவர் படிப்படியாக ஒவ்வொரு பூசையாக அறிவிப்பார். பூசைகள் உலகியல் கடந்து, கூச்சங்கள், அச்சங்கள், மாச்சரியங்கள் ... மிகுந்திருக்கும். எனவே, விருப்பமில்லாதவர்கள் பூசை செய்யாமல் எப்போது வேண்டுமானாலும் விலகிக் கொள்ளலாம். அது, குருவுக்கு வருத்தத்தைத் தரவே தராது. ஏனெனில், **“இப்பிறப்பிலேயே பதினெண்சித்தர் பீடாதிபதி இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கிடும் பிறப்பிறப்பற்ற பெருநிலை எளிதில் கிடைக்காது அனைவருக்கும். மானுடர் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், கைகாலிருந்தும் முடமாய், ... வாழ்ந்து ஊழாலும், விதியாலும் குருவருள் சித்திக்காமல் தடுக்கப் படுவர்...”** என்று குருபாரம்பரிய வாசகம் உலகியலை விளக்குகிறது.

6) ஆரம்பப் பள்ளியில் சேர்ந்த சிறுவர்; முதுகலைப் பட்டப் படிப்புக்குரிய புத்தகங்களைப் பார்த்து விட்டு “அடேயப்பா! இதையெல்லாம் நம்மால் தூக்கக் கூட முடியாதே! ... பிறகு எப்படி? எப்போது படிப்பது?” - என்று பயந்தது போல் யாரும்

சித்தர்களின் பூசைகளைப் பற்றிக் கேள்விப் பட்டுப் பயப்படவே தேவையில்லை. நோயாளி உடல் நலத்துக்காகக் கசப்பான மருந்துகளைச் சாப்பிடுவது போன்றதே குருவழிக் கல்வி. வாழையடி வாழையாக வரும் அருளாளர் பாரம்பரியமே யாம். பிறரை அருளாளராக்கும் வல்லமை பெற்ற பதினெண்சித்தர் பீடாதிபதியே யாம். எனவே, கலக்கம், மயக்கம், தயக்கம், உலகியல் ... உங்களை எங்கே, எப்போது நிறுத்தினாலும் அதுவே ஊழ்வினை! விதி.

இதற்கு மேல் விளக்கம் தேட வேண்டாம். விருப்பம் போல் செயல்பட்டிடுவீர்.

**ஞானத்தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: குருதேவர் அவர்களின் கையெழுத்திலேயே கிடைத்தது.//**

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"**

-- குருபாரம்பரிய வாசகம்.

**விளக்கம்**:- 'அருளுலகில்' என்றால் தனிமனித அன்றாட வழிபாடுகள், கோயில் வழிபாடுகள், கூட்டு வழிபாடுகள், கோயில் குடமுழுக்குப் பூசைகள், வீட்டில் செய்யப்படும் அமாவாசைக்கான முன்னோர் வழிபாடுகள், பிறப்பு - திருமணம் - இறப்பு, ... ஆகியவற்றிற்கான சடங்குகள், வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் நடத்தப்படும் சிறப்புப் பூசைகள், ... ... போன்றவற்றைக் குறிக்கும்.

# "இரண்டாம் முப்பெருவிழா செயல்விளக்க எச்சரிக்கை மடல்"

# "மூன்றும் முப்பெருவிழா செயல்நிலை பாராட்டுத் திருவோலை"

குருதேவர், ஞானத்தந்தை, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள்;

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகனுக்கு விடுத்துக் [இ.மு.செ.வி.எ.ம.; மூ.மு.செ.பா.தி.] கொள்வது:

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமாகின்றன; வெற்றியாகின்றன. தாங்களும் மற்ற நமது நண்பர்களும், எமது வேண்டுகோளின்படி முன்னதாகவே சிறுமுகையூருக்கு வந்திருந்து தங்கி அனைத்தையும் வெற்றியாக்கிக் கொடுத்தமைக்கு எமது வாழ்த்தையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனை அனைவருக்கும் அறிவியுங்கள். இதுபோல இனிமேல், அடிக்கடி சுற்றுப்பயணம் செய்ய உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். ..... ..... ..... நீங்கள் இல்லாவிட்டாலும் அருட்பணிகள் தொடர்ந்து நிகழ வேண்டும் என்பதற்கேற்ப பல அடியான்களை உருவாக்கி விடுங்கள். எச்சரிக்கை, குருவாணை, திருவாணை.

2) சித்தரடியார் சோ.இரவீந்திரன் .... ..... ..... ..... யாம் பலமுறை எழுதியும் சிறுமுகையூரில் "கொள்கை விளக்க வெளியீடு" ஒன்று கூட அச்சிடவில்லை. கிருபானந்தவாரியாருக்கு இந்துமதம்

பற்றி யாம் கூறிய பதிலை அச்சிடவே இல்லை. இதனை அச்சிடுவதற்காக ரூ.301/= எமக்குக் காணிக்கையாக கிடைத்தமையும் கொடுத்தோம். இருந்தும் அச்சிடவேயில்லை. அவன் எழுதிய இரண்டு அஞ்சல்களிலும் இந்த அச்சடிப்பு பற்றிய செய்தி எதுவுமேயில்லை. ..... ..... ...... **ஆவன செய்க**.

3) **<u>நாம் 4 இலட்சம் கூட்டங்கள் நடத்துவதும் சரி, நாலு பக்கத்தில் ஒரு சிறிய அறிக்கை அச்சடித்து வழங்குவதும் சரி</u>**. = இந்தப் பேருண்மையினைத் தெரிந்தும், புரிந்தும், நம்பியும் செயல்படுக. அதாவது, பல மாநில மாநாடுகளும், எண்ணற்ற பெரிய பெரிய ஊர்வலங்களும் உருவாக்கித் தர முடியாத தொண்டர்களை சிறிய, சிறிய அறிவிப்புக்களும், அறிக்கைகளும், புத்தகங்களும் சாதித்துத் தரும். மேலும், நாம் மிகத் தெளிவான, முறையான, முழுமையான, திட்டவட்டமான, காலக் கணக்கீட்டுக்கு உட்பட்ட வரலாறும், இலக்கியமும், தத்துவமும், செயல்நிலைகளும், குறிக்கோள்களும், கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம்! பெற்றிருக்கிறோம்! பெற்றிருக்கிறோம்! இதனை எண்ணிப் பார்த்து நம்மவர்கள் யாம் கூறுபவைகளை அல்லது தருபவைகளை அவசியம் அச்சிட்டேயாக வேண்டும். அப்பொழுதுதான் முழுமையான வெற்றி உண்டு.

4) கார்ல் மார்க்சு கூறியபடி தொழிலாளிகளுக்காக அமையக் கூடிய அரசுகள் ஒற்றுமையோடும், பற்றுப் பாசத்தோடும், நாடு இனம் மொழி... என்ற பாகுபாடுகளைப் பாராட்டாமலும் வாழவில்லை! வாழவில்லை! வாழவில்லை! கம்யூனிச நாடுகள் ஒன்றோடொன்று போரிட்டுக் கொள்வதும், போட்டி போட்டுக் கொண்டு முதலாளித்துவ நாடுகளுடன் உறவு கொள்ளுவதும் மார்க்சீயத்தின் தோல்வியையே காட்டுகின்றன.

எனவே, சித்தரிசம் “எல்லா மொழிகளும், எல்லா இனங்களும், எல்லா நாடுகளும் தனித்தன்மையோடும், உரிமையோடும், பெருமையோடும் வாழவேண்டும். ஒன்றையொன்று அடிமைப்படுத்தவோ,

ஆதிக்கம் செலுத்தவோ, கொள்ளையடிக்கவோ, சுரண்டவோ, ஏமாற்றவோ ... முயலவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது. அப்பொழுதுதான் உலக அமைதி, நிம்மதி, நிறைவு, மகிழ்ச்சி, ஒற்றுமை, நட்பு, சமத்துவம், சகோதரத் தத்துவம், பொதுவுடமை, கூட்டுடமை ... முதலியவை தழைக்கும்" என்று கூறும் இக் கொள்கை விரைவில் தமிழர்களாலும், தென்னிந்தியர்களாலும், இந்தியர்களாலும் உணரப்பட்டே தீரும், தீரும், தீரும்.

அதாவது, சித்தரிசம் இந்தியாவை விரைவில் ஆட்சி செய்யும். அதன்பிறகு உலகம் முழுவதும் ஆட்சி செய்யும். அதாவது, மார்க்சிசம் குறையுடையது என்று உணரப்பட்டு விரைவில் மறைந்தொழியும். எனவே, நம்மவர்கள் பூரிப்போடும், பெருமையோடும் சித்தரிசத்தைக் கூறி செயல்படப் புறப்பட்டிடல் வேண்டும். வீட்டுக்கொரு ஆள் தேவை என்ற வேண்டுகோளை விடுத்தே செயல்படப் புறப்படுக! உடன்பதில்.

அன்பே சிவம்!
ஓம் திருச்சிற்றம்பலம்!

**அன்பு**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**
**29/11/83.**

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:

அருள்மிகு ஆத்தாள் கபாலீசுவரியம்மன் சன்னிதானம்,
சித்தரடியான் சீ.மணி, வேம்படிதாளம், சேலம் மாவட்டம்.

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>நலம் நாடும் திருவோலை</u>

30-11-83இல் ஞாலகுரு சித்தர் கருவூரூர் அருள்மிகு சௌடாம்பிகை அம்மன் சன்னிதானம் செ.வெங்கட்டரமணன் அவர்கள் சமூகத்திற்கு விடுக்கும் **<u>நலம் நாடும் திருவோலை.</u>**

..................... ...................... .................. ....................

5) அரசியல்வாதிகள் பகற்கொள்ளை, இலஞ்சம், ஊழல், முறைகேடு, ... முதலிய அனைத்துச் சமூக விரோதங்களையும், துரோகங்களையும் செய்து விட்டுத் துணிச்சலாகச் சமுதாயத்து முன் தங்களைத் தொண்டர்கள் என அறிவித்துக் கொண்டு உலா வருகிறார்கள். இதனை நம்மைத் தவிர வேறு யாராலும் கண்டிக்க, திருத்த முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! இதற்கு, அடிக்கடி அச்சடிக்க அச்சகமும், ஒரு வார வெளியீடும் தேவை. பொருள் வசதி பற்றி யோசிப்போம்.

6) தமிழ்மொழி, இனம், நாடு என்று பேசித்தான் ஆட்சியில் உள்ளார்கள். இடையிடையே பகுத்தறிவு, நாத்திகம், சமத்துவம், பொதுவுடமை என்றும் கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். **<u>தமிழக மக்கள் இந்தியாவின் பூர்வீகக் குடிகள், இவர்களின் மதமே இந்துமதம். இதுவே இந்திய இனப் பண்பாடுகளுக்கு தாய். இதுபோலத் தமிழ்மொழிதான் இந்திய மொழிகளின் தாய்</u>**. எந்த இனத்தையும், மொழியையும் சர்வாதிகாரம் செய்யாமல், சுரண்டாமல், ஏமாற்றுமல், அடிமைப்படுத்தாமல் ஆட்சியமைப்பதே சித்தரிசம், சித்தர் நெறி. இதை விளக்கித் தமிழக அரசியலையும், இந்திய அரசியலையும் வெல்வோம்.

உடன் செயல்படுக!

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரூர்,**
**30/11/83.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியான் சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

பொன்னேரி,
16-12-83.

# செயற்குழு மாநாடு அறிவிப்பு மடல்

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு,

ஞாலகுரு சித்தர் கருவூரர் கூற பிறம்மாச்சாரியார், அங்காளப் பரமேசுவரி சன்னிதானம், குருவாணை ஓலைநாயகம், இ.ம.இ.- அ.வி.தி. பொறுப்பாளர் சி.கவிக்குமார் B.Sc., 16-12-83இல் எழுதும் குருவாணை திருவோலை.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் நலமாகும், உண்மையாகும். அனைவரும் ஒருவரோடொருவர் ஒத்துப் போகவும், விட்டுக் கொடுக்கவும், பொறுத்துக் கொள்ளவும், பொறுப்போடும் பொறுமையோடும் செயல்படவும், அமைதி காத்து ஒற்றுமையோடும் கட்டுப்பாட்டுடனும் விழிப்புணர்வுடன் செயல்படவும் பழகிக் கொள்ள வேண்டும். இது அருளார்ந்த அன்புமிகு எச்சரிக்கை! வேண்டுகோள்!

2) நாம் மதுரை, திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம் ... என்று குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்குள் மிகப்பெரிய வளமான வலிமையான வளர்ச்சியினை அடைந்திட்டால் போதும்; பிறகு எல்லா மாவட்டங்களிலும் வளர்ந்திடலாம். அதன்பிறகு இந்தியா முழுவதும் வளர்வது மிகமிக எளிதாகும். எனவே, மதுரையில் நடைபெறும் நான்காவது **முப்பெரும் விழா**வில் விரைவில் நாம் கூட்ட இருக்கும் மாநில மாநாட்டுக்கு உரிய

செயல்திட்டங்களை உருவாக்கும் **செயற்குழு மாநாடு** என அறிவிப்பு செய்கின்றோம். (23.12.83 to 26.12.83).

3) நாம் ஒரு மாபெரும் "**பண்பாட்டு மறுமலர்ச்சிப் புரட்சிக் கழகம்** என்பதால் பெரும்பாலும் அனைத்து கொள்கைகளையும், செயல்திட்டங்களையும் பெரும்பாலானவர்களுடன் கலந்து விவாதித்துத்தான் உருவாக்க வேண்டும். இதற்கேற்பவே, இத்துடன் (1) கோள்வட்டச் செயல்திட்டங்கள் (ஒன்பது), (2) இராசிவட்டத் தீர்மானங்கள் (பன்னிரண்டு) ஆகிய இரண்டும் நம்மவர்கள் முன்கூட்டிச் சிந்திப்பதற்கு ஆய்வுக் குறிப்பாக அருள்மிகு பரமாச்சாரியார் திருமந்திற ஓலைநாயகம் சித்தரடியான் நெ.சேவுகன் அவர்களுக்கு அனுப்பப் படுகின்றது.

4) இந்தச் செயற்குழுக் கூட்டத்தை [அந்த வட்டாரத்தார் அனைவருடனும் கலந்து ஆலோசனை செய்து சனி (அ) ஞாயிறு (அ) திங்கள் (24 or 25 or 26.12.83) கிழமைகளில் "இரண்டு மணி நேரம்" (இதற்கு மேல் நீடிக்கக் கூடாது)] கூட்ட உள்ளதால் அனைவரையும் உரிய முறையில் வரும்படி கேட்டுக் கொள்ளவும்.

5) இ.ம.இ.யின் பொருளாதாரத்துக்காகவும், எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் இம் மாநாடு கூட்டப்படுவதால் அனைவரும் சிந்தித்து ஆலோசனை கூறத் தயார் செய்யவும் கீழ்க்கண்ட குறிப்புகள் தரப்படுகின்றன. இதனை ஒட்டியும் விரித்தும் ஆலோசனை வழங்கலாம்.

# நான்காம் முப்பெரும் விழா (23 - 26.12.83) செயற்குழு மாநாடு, மதுரை.

# கோள்வட்டச் செயல்திட்டங்கள் (ஒன்பது)

(1) வினாக்களைக் கேட்க விரும்புகின்றவர்கள் 22.12.83க்குள் குருதேவருக்கோ, வீரமாகாளி சன்னிதானத்துக்கோ வினாக்களை எழுத்து மூலம் அனுப்பிடல் வேண்டும். இவற்றிற்கு மட்டுமே 25.12.83இல் நடக்கும் செயற்குழு கருத்து விளக்க விவாதமன்றம் பதில் வழங்கும்.

(2) அருட்பட்டங்கள் பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இது **கருவறை, உலைக்களம்.** ... புரிந்தும் புரியவைத்தும் உரியவர்களை மட்டும் அழைத்து வருக!

(3) குறைந்தது ஐந்து நபர்கள் ஒன்று சேர்ந்தால்தான் ஓர் அமைப்பை, மன்றம், கழகம், குழு, சங்கம் ... என்ற பெயரில் அமைக்கலாம். இது இ.ம.இ., அ.வி.தி. இரண்டின் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே என்றென்றும் செயல்படும் - என்ற உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுத்து வட்டம், மாவட்டம், மாநிலம் என்ற மூன்று செயலகங்களிலும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(4) 17 (பதினேழு) பேர்கள் ஒன்று சேர்ந்தால்தான் இ.ம.இ.யின் கிளை அலுவலகம் அமைக்கலாம். இதையும் வட்டம், மாவட்டம், மாநிலச் செயலகங்களில் முறைப்படி பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒரே தெருவில் கூட இரண்டு மூன்று கிளை அமைப்புக்கள் அமைக்கலாம்.

(5) அ.வி.தி. நிலையம் ஒரே ஓர் அருளாளர், அருட்பட்டங்கள் பெற்ற சன்னிதானமாக இருந்தாலும் அமைக்கலாம்.

(a) ஞானக்கொடிகள் இரண்டு ஒரே கொடிமரத்தில் ஏற்ற வேண்டும். யாகசாலை ஒரே ஓர் யாககுண்டமாவது அ.வி.தி. தலைமைச் செயலாளர், பரமாச்சாரியார், அருள்மிகு சித்தரடியான் வீரமாகாளி சன்னிதானம் அவர்கள்; இ.ம.இ., அ.வி.தி. தலைமைப் பொறுப்பாளர் பிறம்மாச்சாரியார், அருள்மிகு சித்தரடியான் அங்காளப் பரமேச்சுவரி சன்னிதானம் அவர்கள் ஆகிய இருவரில் ஒருவராவது நேரில் வந்து சக்கரம், தகடு, எந்தரம், ... முதலியவை வைத்துத்தான் யாககுண்டம், அ.வி.தி. நிலையம் துவக்கப்படல் வேண்டும். இந்தக் கிளை அமைப்பு, முறைப்படி காரியேந்தல்பட்டித் தலைமைச் செயலகத்திலும், பொன்னேரித் தலைமைப் பொறுப்பாளரின் அலுவலகத்திலும் பதிவு செய்யப்படல் வேண்டும். உறுதிமொழிப் பத்திரம் எழுதித் தரல் வேண்டும்.

(6) பொதுவான உறுதிமொழிப் பத்திரம் விரைவில் அச்சிடப்படல் வேண்டும். இ.ம.இ. உறுப்பினர், அ.வி.தி. அருளாளர், இ.ம.இ. கிளை, அ.வி.தி. கிளை ... முதலிய நிறுவனங்களின் உறுதிமொழிப் பத்திரம் ஒரே மாதிரியா? அல்லது தனித்தனியா? விவாதிக்க வேண்டும்.

(7) கிளை அலுவலகம் பதிவு அட்டை, உறுப்பினர் சந்தா இரசீது, நன்கொடை புத்தகம் அச்சிடல் வேண்டும்.

(8) முழுநேர ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தல் - ஊதியம் வழங்கல்.

(9) அ.வி.தி. வருமானம்; இ.ம.இ. வருமானம் முறைப்படுத்துதல்.

# இராசிவட்டத் தீர்மானங்கள் (பன்னிரண்டு)

(1) ஆத்திகர்கள்தான் நாடாள வேண்டும்.

(2) இந்துமதம் இந்திய அரசின் மதமாக அறிவிக்கப்படல் வேண்டும்.

(3) சிறுபான்மை மதத்துக்கு என்று தனிப்பட்ட சலுகை தருவதுபோல் அதே சலுகைகளை இந்துமதத்துக்கும் தர வேண்டும்.

(4) கோவில் சொத்துகளுக்கு வரி விதித்தலோ, கோவில் நிலங்களுக்கு வரி விதித்தலோ கூடாது.

(5) கோவில் வருமானங்களை மற்ற கோவில்களைப் புதுப்பிக்கவும், அன்றாடம் ஆறுகாலப் பூசைகளும், முறையாக அனைத்துத் திருவிழாக்களும் நிகழ்த்தத்தான் செலவிட வேண்டும். கலைஞர்களுக்குப் பொருள் வழங்குதல்; மதக்கலைகளைக் கற்பிக்கும் நிறுவனங்களை நடத்துதல் முதலியவற்றிற்கு மட்டுமே கோவில் வருமானங்களைச் செலவு செய்ய வேண்டும்.

(6) கோவில் நிர்வாகங்களில் ஆத்திகர்கள்தான் அதிகாரிகளாக இருக்க வேண்டும்.

(7) இந்துமதம் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பாக ஆக்கப்படல் வேண்டும். இதில் பட்டம் பெற்றவர்களே மதத்துறை அலுவலகங்களில் பணியாற்ற வேண்டும்.

(8) இந்துமதக் கோவில்கள் இன்று சீக்கியர்களின் பொற்கோவில் எப்படி அன்னியரோ! மத்திய அரசோ! நுழைய முடியாத வலுவான கோட்டையாக இருக்கின்றதோ அப்படி உருவாக்கப்படல் வேண்டும்.

(9) உலகிலேயே சித்து விளையாடல் புரியும் அருளாளர்கள் இந்துமதத்தில்தான் நிறையப் பேர் எப்போதும் எங்கும் இருக்கின்றனர். இவர்கள் ஒன்றுபடல் வேண்டும்.

(10) இந்துமதத்தின் பெயரால் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, ஒற்றுமைப்பட்டு, ஒன்றுகிச் செயல்படல் வேண்டும்.

(11) எந்த மதத்தோடும் வேற்றுமையோ, பகையோ, பொறுமையோ, போட்டியோ, போராட்டமோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

(12) இந்துக்களை இந்துமதத்தைத் தெரிந்தும் புரிந்தும் வாழுமாறு செய்ய வேண்டும். இந்துக்கள் இந்துமத அறிவு, நம்பிக்கை, பற்று, பாசம், மதிப்பு, பெருமை, உரிமை, உணர்வுகளோடு வாழுமாறு செய்ய வேண்டும்.

புரிந்தும் உணர்ந்தும் செயல்படுக!

ஓம் திருச்சிற்றம்பலம்!

**அன்பு**

**சி.கவிக்குமார்.**

**(ஒப்பம்)**

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்,**

**16/12/83.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு சி.கவிக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

# வேம்பை அடியான்களுக்கு விளக்கம் தரும் மடல்.

22/4/83,
பெரம்பூர், சென்னை-11.

அன்புள்ள அருள்மிகு கபாலீசுவரியம்மன் சன்னிதானம் சீ.மணி அவர்கள் சமூகத்திற்கு குருதேவருக்காக, குருதேவரால் கூறக் கேட்டுப் பின் எழுதியவர், அருள்மிகு பதினாறு திருக்கரம் கொண்டருளுதேவி ஆத்தாள் அகோரவீரபத்திர காளியம்மன் சன்னிதானம் சித்தரடியான் இரா.சுப்புராயலு வரையும் மடல்:

1. தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமே! நன்மையே! உண்மையே! வெற்றியே!

2. தாங்கள் 21.4.83 அன்று அனுப்பிய கடிதம் கிடைக்கப் பெற்றோம். மகிழ்ச்சியே!

3. தாங்கள் கேட்டுள்ள கேள்வியை எண்ணி குருதேவர் அவர்கள் அதிகம் வருத்தம் அடைகின்றார். காரணம் அக்கேள்விகளுக்கு நீங்கள் முயற்சி செய்தால் விடை உங்களுக்குக் கிடைக்கும். அறுபத்துமூன்று நாயன்மார்களை உருவாக்கியவர்கள் சித்தர்கள். அவர்களை எல்லாம் நாயன்மார்கள் என்று அறிவித்த பொழுது கூக்குரல் எழவில்லை. ஆனால், இப்பொழுது அறுபத்து நான்காவது நாயன்மாராக அறிவிக்கப்பட்ட தந்தை ஈ.வெ.ரா. பெரியார் அவர்களை அறிவித்தது அனைவருக்கும் வியப்பை ஊட்டுகின்றது. காரணம் ‘கடவுள் இல்லை’ என்றார், ‘மதமும்

இல்லை; கடவுளை கற்பித்தவன் முட்டாள்' ... போன்ற எதிர்ப்புக் குரலை கொடுத்தவர் என்பது அனைவரும் அறிந்ததே. குருதேவரும் நம்மவரும் ஏற்றுக் கொண்டே உள்ளோம். அவர் ஏன் அவ்வாறு கூறினார் என்று யாரும் சிந்திக்கவில்லை. அவர் அவ்வாறு கூறியதற்கும், அவருடைய கருத்திற்கும்தான் நம் குருதேவர் அவர்கள் அவரை அறுபத்து நான்காவது நாயன்மார் என்று அறிவித்தார். அறுபத்து மூவரையும் உருவாக்கியவர் சித்தர்தான். அறுபத்து நான்காவது நாயன்மாரை உருவாக்கியவரும் இன்றைய ஞாலகுரு சித்தர் கருவூரார்தான். அவர் அறுபத்து நான்காவது நாயன்மாராக ஈ.வெ.ரா. பெரியாரை அறிவித்தது அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

நாயன்மாரையும், ஆழ்வார்களையும் உருவாக்கியவர்கள் சித்தர்கள்தான். இவற்றை எவ்வாறு உருவாக்கலாம் என்று "குருவழிக் காணல்" வழியாகத்தான் அறிய முடியும். வெறும் வாய்ப்பேச்சால் அவர்களுக்கு அறிய வைப்பதை விட நாம் அனைத்தையும் செயல்வடிவில் செய்து அவர்களுக்குத் தெரிய வைக்க முடியும். உறங்கிக் கிடந்த தெய்வ வழிபாட்டை மக்கள் நன்கு அறிய 'கடவுள் இல்லை! கடவுள் இல்லை!' என்று அவ் வழிபாட்டை விழிப்படையச் செய்தார். கண்டிக்க கண்டிக்கத்தான் மனிதன் தீய வழியிலோ அல்லது நல்வழியிலோ செல்வான். இது அனைவரும் அறிந்ததே. இல்லை! இல்லை!! என்று கூறிய பெரியாரின் பேச்சைக் கேட்காமல் மக்கள் அவருடைய கண்டிப்புக்கு அடங்காமல் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டனர். இது யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

4) மனிதன் ஒருவன் தனக்கு தலைசிறந்த ஒரு தலைவனையே தேர்ந்து எடுக்க வேண்டும். அவனைத் தலைவனாக தேர்ந்து எடுப்பது அவரவர் விருப்பம். ஆனால், ஒரு தலைவனை தேர்ந்து எடுத்தபின் அவன் கூறும் வழியில் செல்லாமல் அவனை எதிர்ப்பதோ, அல்லது

அவனை இழிவு செய்வதோ கூடாது. காரணம் நாம்தான் அவனைத் தலைவனாகத் தேர்ந்து எடுத்தோம். நாம் விருப்பப்பட்டுத்தான் அவனைத் தேர்ந்து எடுத்தோம். பின் அவன் தலைவன் இல்லை என்று கூறுவதோ, அல்லது அத்தலைவனுக்கு எதிராகக் காரியம் செய்வதோ முறையாகாது. இது ஒரு தலைவனை தேர்ந்தெடுப்பதற்கு உரிய தகுதி. இத் தகுதி எவ்வியக்கத்திற்கும் உரியது. நம் இயக்கத்திற்கும் உரிய தகுதிதான். நம் இயக்கத்தில் சேர்பவருக்கும் தலைவன் வழியே தூய வழி என்று பின்பற்றுபவர் நமக்கு, நம் இயக்கத்திற்குத் தேவை.

5) முன்பு இயக்கத்தில் உள்ளவர்கள் நம் இயக்கத்தை விட்டு ஓடிவிட்டார்கள் என்பது உண்மையே. அப்படி ஓடிவிட்டதற்கு முன்பும், பின்பும் நம் இயக்கத்தைப் பாருங்கள். அவர்கள் வருவதற்கு முன் நம் இயக்கம் வளர்ச்சி பெறவில்லை. அதற்குப் பின் (ஓடியதற்குப் பின்) நம் இயக்கம் நன்கு வளர்ச்சி பெற்று உள்ளது. கழிவுகளை அகற்றிவிட வேண்டும். அதாவது நல்லவைகளையும், கழிவுகளையும் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்க்கக் கூடாது. கழிவுகளை அப்போதைக்கப்போது நீக்கி விட்டால்தான் நல்லவைகள் தேறும்; அல்லது நல்லவைகளும் அத்துடன் முடிந்து விடும்.

6) அருளாட்சி அமைவது உறுதிதான். அதை மக்கள் உணர்ந்து ஏற்றுத்தான் அருளாட்சி அமைப்போம். அதை விட்டு மந்திரத்தில் மக்களை மயக்கி அருளாட்சி அமைக்கப் போவது கிடையாது. நாம் அருளாட்சியை அமைக்கத் தயார்நிலையில் உள்ளோம். மக்கள் அதை சரிவர உணர முடியவில்லை. அதனால்தான் அருளாட்சி அமைவதில் சற்று தாமதம் ஆகிக் கொண்டே போகின்றது.

7) குருதேவர் இன்று வருகிறார்? நாளை வருகிறார்? என்று மக்களை ஏமாற்றிக் கொண்டுள்ளார் என்று கூறியுள்ளீர்கள். குருதேவர் எங்கும் வரத் தேவையே இல்லை. காரணம் <u>குருதேவரால்</u>

உருவாக்கப்பட்ட அடியான்கள், அடியார்கள், அடியாள்களை தனக்கு (குருதேவருக்கு) சமமாகவே உருவாக்குகிறார். அவர் உருவாக்கிய அடியான்களை வைத்து அனைத்தும் செய்யலாம். தன்னால் எல்லாம் இயலும் என்று நினைத்தால் போதும்; எல்லாம் செய்யலாம். ஆனால், சுயநலத்திற்கு மட்டும் ஈடுபடக் கூடாது. குருதேவர் இருந்த இடத்திலிருந்து அனைத்தும் செய்ய முடியும் என்ற போது அங்கு வந்து செய்ய வேண்டும் என்ற அவசியமே இல்லை.

8) சித்தர்கள் நேரடியாக மக்களைச் சந்திப்பதை விட தாங்கள் உருவாக்கும் அருளாளர்கள் மூலமும், வழிபாட்டு நிலையங்கள் மூலமும் மக்களைச் சந்திப்பர். இது மரபு. எனவேதான், நமது குருதேவர் மிகமிக அவசியம் என்று கருதினால் ஒழிய சுற்றுப்பயணம் மேற்கொள்வதில்லை. சந்தேகம் கேட்கிறவர்கள் கடவுளே நேரில் வந்து விளக்கினாலும் கூட சந்தேகம் மேலும் மேலும் கேட்பர். எனவே, யாராக இருந்தாலும், சித்தர்நெறிப்படி வாழ்ந்து அநுபவப் பூர்வமாக சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் சித்தர் நெறி ஏட்டுச் சுரைக்காய் அல்ல! கற்பனை காரியம் அல்ல!

9) நாயன்மார் என்பவர்கள் மத வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் பாடுபட்டவர் என்ற கருத்தின்படிப் பார்த்தால் பெரியார் ஈ.வெ.ரா.வால் நாடெங்கும் கணக்கற்ற பிள்ளையார் கோயில்கள் வந்தன. பழமையான கோயில்கள் பழுது பார்க்கப்பட்டன. மக்களின் மத உணர்வு விழிச்சியும், செழுச்சியும் பெற்றிருக்கின்றது. எனவே, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறுபத்துமூன்று நாயன்மாரை விட அதிகமான சாதனைகளை சாதித்த புரட்சி நாயனார், புதுமை நாயனார், பெரிய நாயனார், பேராற்றல் மிக்க நாயனார். இந்த பகுத்தறிவு விளக்கத்தை அன்பு கூர்ந்து அனைவருக்கும் விளக்குங்கள். மேலும் பதினெண்சித்தர்கள் வகுத்துள்ள சட்டதிட்ட, சாத்திற, சம்பிறதாய நூல்களின்படிதான் நமது குருதேவர் இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு

சித்தர் கருவூரர் அவர்கள்; பெரியார் ஈ.வெ.ரா.வின் தமிழ்த் தொண்டு, தமிழினத் தொண்டு, தமிழ்நாட்டுத் தொண்டு முதலியவற்றையும் பாராட்டி அவரை அறுபத்துநான்காவது நாயன்மாராக அறிவித்துள்ளார். எனவே, ஒரு விஞ்ஞானி தான் கண்டுபிடிக்கும் புதிய சாதனையை அடுத்த விஞ்ஞானிகளுக்குத்தான் விளக்கிட முடியும் என்பது போல் நம் குருதேவர் அறிவிப்பை நம் சன்னிதானங்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்ற நினைப்பில் செயல்படுங்கள்.

10) மற்ற அரசியல்வாதிகளைப் போல கூட்டம் போட்டு பேசி; பொதுமக்களை ஏமாற்ற விரும்பவில்லை நாம். இந்தியாவில் தோன்றிய கட்சிகள் அனைத்தும் இதுவரை தங்களுடைய கொள்கையை அச்சிட்டுக் கொடுக்கவில்லை. நாம் மட்டும்தான் அச்சடித்து கொடுத்துள்ளோம். எனவே, இதன்மூலம் நமது கொள்கைகளை நன்கு புரிந்தவர்களை ஒன்றுதிரட்டி அருளுலகத் தத்துவங்களிலும், செயல்பாட்டிலும் பயிற்சி கொடுத்து செயல்வீரர்களை உருவாக்கி அவர்களால் அமைகின்ற அருட்படையின் மூலம் நேரடியாக அனைத்தையும் சந்திப்போம். அனாவசியமாக பொதுமக்களின் நேரத்தையும், அறிவையும், உழைப்பையும் கெடுக்க மாட்டோம். பொதுக்கூட்டம் போட்டு பேசுவதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஆனால், பூசைகளுக்கு வருகிறவர்கள் மூலம் நேரில் உரையாடி தகுதியுடையவரை மட்டும் ஏற்றுக் கொள்கிறோம். அதாவது களத்துமேட்டில் உள்ள நெல்லில் விதைப்பதற்காக எடுக்கப்படுவதற்கு எப்படி நன்கு தூசு, கருக்கு, சாவி, பிஞ்சுநெல் முதலியவற்றை அகற்றி எடுக்கப்படுகிறதோ அதுபோல போதிய அறிவு வளர்ச்சி, வீரம், ஈரம், மறம், அறம், ஆற்றல், ஆர்வம், அடக்கம், பேராசை இல்லாமை, பொறாமை இல்லாமை, வெறி இல்லாமை முதலிய பண்புள்ளவர்களை மட்டுமே தேர்ந்து எடுப்போம். இதனை பொதுக்கூட்டத்தில் ஏராளமான மக்களைச்

சந்திக்கும்போது தயாரிக்க முடியாது. இதனால் பொதுக்கூட்டம் போடுவதில்லை.

இந்த முறையில் நாம் எதிர்பார்க்கும் கணிசமான அளவு பயிற்சி பெற்ற செயல்வீரர்களை தயாரித்த பிறகே; நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற செயல்திட்ட விளக்கங்கள் வழங்குவதற்காக மட்டுமே (கொள்கை + குறிக்கோள் + செயல்திட்டம்) பொதுக்கூட்டம் போடுவோம் நாம். ஆனால், அப்போது வரும் கூட்டம் மட்டுமே இன்றைய அரசியல்வாதிகளும், சமய சமுதாய இலக்கிய கலைவாதிகளும் ஆரவாரமாக நிகழ்த்துகின்ற ஆடம்பரமான பயனற்ற பொழுதுபோக்கும் பொதுக்கூட்டமாக இருக்காது. அதாவது, அந்த பொதுக்கூட்டங்கள் மிகமிகக் குறுகிய கால அளவுக்குள் சமுதாயத்தின் அடித் தளத்தில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து வகையான மக்களையும்; சமுதாயத்தின் மேல் தளத்தில் போலித்தன்மையும், கூலித்தன்மையும் இல்லாமல் உண்மையான அறிவு வளர்ச்சி பெற்றிருக்கும் மக்களையும் கிளர்ச்சி பெற்றெழுந்து அமைதிவழிப் புரட்சிப் பணிகளில் ஈடுபட்டிட செய்வனவாக இருக்கும். அப்பொழுது இன்றைக்கு உங்களைப் போன்றவர்களை எல்லாம் சந்தேகக் கேள்விகளைக் கேட்டு குழப்புகின்ற சந்தர்ப்பவாதிகள், கோழைகள், அடிமைப்புத்தி படைத்தவர்கள், தயக்கக்காரர்கள், மயக்கக்காரர்கள், அப்பாவிகள், ... முதலியோர் அனைவருமே ஆற்றின் நீரின் போக்கிலேயே செல்லுகின்ற படகுபோல் நம்முடைய மறுமலர்ச்சிப் படையின் போக்கிலேயே தங்களை முழுமையாக இணைத்துக் கொண்டு செயல்பட்டிடுவார்கள். அதாவது, சமுதாயத்தின் பொதுமக்கள் பெரும்திரளினர் மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போல் நம்முடைய சொல்லிற்கு கட்டுப்பட்டு செயல்படுவார்கள். அதனால், நாம் விரும்புகின்ற ‘முழுமைப் புரட்சி’ (Total Revolution) நிகழ்ந்திடும். அதன் அடிப்படையில் சித்தர்நெறி கூறுகின்ற ‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ அமைத்திடுவதற்கு

தேவையான எல்லாச் சமுதாய மாற்றங்களையும் செய்திட முடியும் நம்மால். எனவே, இன்றைக்கு நாம் நாட்டு நடப்பில் உள்ள அரசியல், சமய, சமுதாய, இலக்கிய, கலை இயக்கங்களைப் போல் கூட்டம் போட்டு ஆரவாரம் நிறைந்த பயனற்ற ஆர்ப்பாட்ட செயல்களில் ஈடுபடத் தயாராக இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை.

11) அதாவது சித்தர்நெறியில் பலிகள் கொடுப்பது, யாகங்கள் செய்வது, அருளூறு தெய்வீக வாசகங்களைக் கூறுவது ... என்பதற்கெல்லாம் ஆயிரக்கணக்கான நூல்கள் அடிப்படையாக இருக்கின்றன. இவைகள் பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டு செயல்வடிவில் இருந்து வருகின்றன. எனவே, இவற்றை ஏன்? எதற்கு? என்று கேட்பதற்கு இவைதான் 'சித்தர் நெறி' என்ற பதிலைத்தான் கூறவேண்டும். அதாவது, அவர்கள் நம்மோடு சேர்ந்து சித்தர்நெறிப்படி செயல்பட்டு அனுபவப் பூர்வமாகத்தான் தங்களுடைய சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடியும் அல்லது புரிந்து கொள்ள முடியும்.

இப்பொழுது நமது குருதேவர் முன்பு தன்னுடைய அங்கங்களில் ஒன்றின் ஒரு பகுதியைப் பலியாகக் கொடுத்தது போல்; மீண்டும் தன்னுடைய ஓர் அங்கத்தின் ஒரு உறுப்பின் ஒரு பகுதியை சிறிதளவில் பலியாகக் கொடுக்கிறார். ஆனால், முன்பு போல் விஞ்ஞான சூழ்நிலையில் மருத்துவ முறையிலேயே இந்த அங்கக் குறைப்பை நிகழ்த்திக் கொள்கிறார். 23/4/83இல் அரசாங்க பெரிய மருத்துவமனையில் (Madras G.H.) அறுவை மருத்துவத்திற்காகத் தன் பெயரை பதிவு செய்துவிட்டார். எனவே, நமது குருதேவர் எதையும் அனுபவப் பூர்வமாகத்தான் மற்றவர்களுக்கு அறிவிக்கிறார், தெரிவிக்கிறார், புரிவிக்கிறார்.

இவற்றையெல்லாம் நினைத்தாவது உங்களைப் போன்றோர் அடிக்கடி சந்தேகங்களைக் கேட்டு குருதேவரைத் தொல்லை செய்யாமல் இருக்க வேண்டும். அதாவது, நமது குருதேவர் மிகவும் புரட்சிகரமான முறையில் இம்மண்ணுலகில் எந்த அருளாளரும் செயல்படாத முறையில் தமக்குச் சமமாகவே அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் உருவாக்கிடுகிறார் என்பதைப் புரிந்து தன்னம்பிக்கையோடு செயல்பட வேண்டும். எனவே, நம்மவர்கள் தவத்தாலும், பூசைகளாலும் உடனுக்குடன் குருதேவருடன் தொடர்பு கொண்டும், தாத்தாக்கள் ஆத்தாக்களிடம் சத்திகளைப் பெற்றும் செயல்பட்டிடல் வேண்டும்!

இந்த அஞ்சலின் நகலை உடனடியாக வீரமாகாளி சன்னிதானம், மதுரை இளைஞரணிச் செயலகம், திருச்சி மாவட்டம், முசிறி வட்ட குலக்குடி கிராமம், சென்னை வட்டார நண்பர்கள் முதலியவருக்கும் அனுப்புங்கள். குருதேவருக்கு (2) இரண்டு பேனா நகலும், 10 கார்பன் நகல்களும் எழுத எழுத அனுப்பிக் கொண்டே இருங்கள். அவசரம்! அவசியம்! (முடிந்தால் அச்சடியுங்கள், அல்லது தட்டெழுத்தில் பல நகல்கள் தயாரியுங்கள்.)

அன்பு

சித்தரடியான் இரா.சுப்புராயலு.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லை.//**

# அரசபாரம்பரியம்

## சித்தர்கள் தரும் வரலாற்றுச் செய்திகள்

**உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கழகம்,**
**உலக மத ஒற்றுமைக் கழகம்,**
**உலக அருளாளர் கழகம்,**
**இந்தியத் தத்துவக் கழகம்,**
**இந்திய சித்தாந்தக் கழகம்,**
**இந்திய பண்பாட்டுக் கழகம்,**
**சித்தர் அருளியல் கலைக் கழகம்,**
**சித்தர் பொருளியல் கலைக் கழகம்,**
**சித்தர் போரியல் கலைக் கழகம்.**

"... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் இருநூற்றைம்பதாண்டு காலத்தில் சாதிக்க முடியாதவைகளைச் சாதிக்க பல கலைக் கழகங்களைப் பல நாடுகளிலும், பல நோக்குகளில் பைந்தமிழ்ப் பெரியார்களைக் கொண்டு உருவாக்கினார். அவற்றின் அருமையையும், பெருமையையும், அரிய பயனையும் தெரிந்தே பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தஞ்சையில் பன்னாட்டுப் பன்னோக்குப் பல்கலைக் கழகம் நிறுவி, அதன் கருவூலமாக தஞ்சைப் பெரிய உடையார் கோயிலைக் கட்டி அதன் மடியில் நீள் தவத்தில் ஆழ்ந்திட்டார்.

**குருபாரம்பரியம்.**
**கருவூர்த் தேவர் வாக்கு.**
**திருமாளிகைத் தேவர் வாக்கு.**

***//இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொடியைப் பற்றி 1983இல் குருதேவர் வழங்கிய அறிவிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//***

**“அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”** -- குருபாரம்பரிய வாசகம்.



“... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வெற்றி பெறுமாறு செய்தார். ... ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org